# பரிசுத்தினம் - 2015

# யா/ கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை





## 24—10—2015

## *J/ Kokuvil*
## *Sri Ramakrishna Vidyasalai*

# யா/ கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை


## பரிசளிப்பு விழா – 2013, 2014

# J/ Kokuvil
# Sri Ramakrishna vidyasalai



# பரிசளிப்பு விழா

## 24-10-2015



# யா/கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை
# பரிசளிப்பு விழா —2013,2014

## அதிபர் அறிக்கை

எமது வித்தியாசாலை வளாகத்தில் வீற்றிருந்து அருள் பாலித்துக் காத்துவரும் வைரவப் பெருமானின் பாதாரவிந்தங்களைப் பணிந்து வணங்கி, எம்பாடசாலைக்கும் எமக்கும் என்றும் அருளாசி வழங்கிக் கொண்டிருக்கும் பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சரின் துணையுடன், இன்றைய பரிசுத்தின நன்நாளில் எமக்கு ஆசிவழங்க வந்திருக்கும் சிம்ய மிஷன் சுவாமிஜீ பிரமச்சரிய ஜாக்கிரத சைதன்ய அவர்களே!

எமது பரிசளிப்பு விழா பிரதம விருந்தினராக வருகை தந்து சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ ஈஸ்வரபாதம் சரவணபவன் அவர்களே!

யாழ் கல்வி வலயத்தில் நீண்டகாலம் கல்வி அபிவிருத்திப் பிரிவில் பிரதிககல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி, பதவி உயர்வு பெற்று மாகாணக் கல்வித் திணைக்கள பிரதிக் கல்விப் பணிப்பாளர் பதவியை அலங்கரித்து, நீண்ட காலக் கல்விச் சேவையிலிருந்து ஓய்வு பெற்று, இன்று எமது விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் திருவாளர் தம்பையா இராசலிங்கம் அவர்களே!

இப்பாடசாலை வளர்ச்சிப்படிகளில் சேவையாற்றிய அதிபர்கள் வரிசையில் ஒருவராகி, சேவையால் உயர்ந்து ஆரம்பக்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி இன்று ஒய்வு நிலையில் எமது பரிசளிப்பு விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் திருமதி கமலாம்பிகை சுப்பிரமணியம் அம்மா அவர்களே!

எமது பரிசுத்தின விழாவை சிறப்பிக்க வந்திருக்கும் கல்விப் புலம்சார் அதிகாரிகளே, இப்பாடசாலையில் கடமையாற்றிய ஓய்வுநிலை அதிபர்களே, ஆசிரியர்களே, அன்பிற்குரிய அயற்

பாடசாலை அதிபர்களே, ஆசிரியர்களே எமது அழைப்பை ஏற்று வந்திருக்கும் விருந்தினர்களே, எமது பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களே, எமது அன்பிற்கினிய பெற்றோர்களே, நலன்விரும்பிகளே, எமது பாடசாலை ஆசிரியர்களே, பழைய மாணவர்களே, மாணவச் செல்வங்களே, உங்கள் அனைவருக்கும் சிரம் தாழ்த்தி கரம் கூப்பி எனது வணக்கத்தைக் கூறிக் கொள்வதோடு இதயம் கனிந்து, இன்ப உவகை பொங்க, பாடசாலை சமூகம் சார்பாக வருக வருக என வரவேற்பதில் பெருமகிழ்வடைகின்றேன்.

இன்றைய பரிசளிப்பு வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டிருக்கும் உயர்திரு ஈஸ்வரபாதம் சரவணபவன் அவர்கள், யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்ற கௌரவ பதவியில் முத்தாக மிளிர்பவர், தாங்கள் எமது பாடசாலைப் பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டிருப்பது எமக்குப் பெருமை சேர்ப்பதாகும். தங்களுக்கு எமது பாடசாலையைத் தரிசிக்கும் கடப்பாடு உண்டு என நினைக்கின்றேன். ஏனெனில் தாங்கள், சிறுகை நீட்டி குறுநடை பயின்ற காலத்தில் ஆரம்பக்கல்விக்காக அரவணைத்த எமது வித்தியாசாலை அன்னையின், தவப்புதல்வன் என்று கூறிக்கொள்வதில் பெருமிதம் அடைகின்றேன். எமது வித்தியாசாலையில் தரம் -3 வரை கல்வி கற்ற தாங்கள், தொடர்ந்து யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் கல்வி கற்று, இந்து அன்னையின் புகழ்பூத்த மைந்தர்களில் ஒருவராகத் திகழ்கின்றீர்கள். ஊடகத் துறையூடான உங்கள் வாழ்க்கைப் பயணம், பல சோதனைகளுக்கு மத்தியிலும் சாதனையுடன் வீறு நடை காண்கின்றது. உதயன் நாளிதழை பார்க்காத பலருக்கு, அன்றைய பொழுது விடியாப் பொழுது என்னும் அளவுக்கு, மக்கள் மனங்கவர் நாளிதழாக உதயன் வெளிவந்து கொண்டிருக்கிற தென்றால், அதன் வளர்ச்சியிலும் உயர்ச்சியிலும் நிர்வாக இயக்குனர் என்ற வகையில் உங்கள் பங்களிப்பு காத்திரமானது.

ஊடகத்துறையுடன் மட்டும் உங்கள் சேவை நின்றுவிடவில்லை. "மக்கள் சேவையே மகேசன் சேவை" என கருதி சமூக நலத் திட்டங்கள் பலவற்றை முன்னெடுத்து வருகின்றீர்கள். நலிவுற்றோருக்கான வாழ்வாதாரத் திட்டங்கள் ,கல்வி ஊக்கவிப்புக்கள் என்று உங்கள் சமூகப்பணி தொடர்கிறது. 30 வருட கால போர் அரக்கன் தமிழ் மக்களின் வாழ்க்கையை புரட்டிப் போட்டது. இந்த ஆறாத வடுவை மாற்றகின்ற அருமருந்தாக தங்கள் ஊடகப்பணியும் சமூக சேவையும் அமைகின்றது என்றால் மிகையாகாது எனலாம்.

" பண்புடையார் பட்டுஉண்டு உலகம் அது இன்றேல்
மண்புக்கு மாய்வது மன்"

என்ற வள்ளுவர் வாய்மொழிக்கமைய பண்புடையாளர்களால் தான் இவ்வுலகம் நின்று நிலைக்கின்றது. இதற்கிணங்க தங்களைப் போன்ற மனிதநேயப் பண்பாளர்கள் நொந்து போன எம் சமூகத்திற்கு விடிவெள்ளி போன்றவர்கள்: தொழிலதிபரான தாங்கள் வேலை வாய்ப்புக்களை வழங்கி பலரை வாழ வைக்கும் பெரும் கைங்கரியத்தைக் கண்டு போற்றுகின்றோம். தங்கள் பணிகள் யாவும் மேன்மேலும் சிறக்க இறைவனைப் பிரார்த்திக்கினறேன்.

யாழ் கல்வி வலயத்தில் நீண்ட காலம் கல்வி அபிவிருத்திப் பிரிவில் பிரதிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி பதவியுயர்வு பெற்று மாகாண கல்வித் திணைக்களப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் பதவியை அலங்கரித்து நீண்ட கால கல்விச் சேவையில் இருந்து ஓய்வு பெற்று இன்று எமது விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டிருக்கும் உயர்திரு தம்பையா இராசலிங்கம் அவர்களே!

தாங்கள் ஆரம்பக் கல்வியை கிளி / இராமநாதன் அ.த.க பாடசாலையில் கற்றுப் பின், கிளிநொச்சி மகா வித்தியாலத்திலும், யாழ் புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரியிலும் கற்று தேர்ச்சி பெற்று பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைப்பட்டதாரி படிப்பை நிறைவு செய்தீர்கள். உடுத்துறை மகாவித்தியாலத்தில் ஆசிரியப்பணியில் இணைந்து கொண்ட நீங்கள், வடமராட்சி கல்வி வலயத்தில்

சமூகக்கல்வி, வரலாறு பாட ஆசிரிய ஆலோசகராகவும் பின் உடுத்துறை மகா வித்தியாலத்தின் அதிபராகவும் கடமையாற்றி மாணவர்களுக்கு உயரிய சேவையைச் செவ்வனே வழங்கினீர்கள். மருதங்கேணி கோட்டத்தில் உதவிக் கல்விப் பணிப்பாளராக பொறுப்பேற்றுக் கொண்ட காலத்தில் ஏற்பட்ட அமைதியற்ற காலச் சூழலில் பல்வேறு சிரமங்களுக்கு முகங் கொடுத்து, உங்கள் சேவையைக் கால நேரம் பாராது வழங்கினீர்கள். இதனைத் தொடர்ந்து யாழ் கல்வி வலயத்தில் அபிவிருத்திப் பிரிவுப் பிரதிக் கல்விப் பணிப்பாளராக பணியாற்றியதுடன், மாகாண கல்வித் திணைக்களப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் பதவியை அலங்கரித்தீர்கள்.

பதவிநிலை பாராது எல்லோருடனும் சமமாகவும் அன்பாகவும் பழகும் பாங்குதான் தங்களை இவ் உயர்நிலைக்குக் கொண்டு சென்றது என்றால் மிகையாகாது. தாங்கள் எமது வலயத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளராக சேவை செய்த காலத்தில், எமதுவலய பாடசாலைகளுக்குச் செய்த சேவை அளப்பரியது. அதிபர், ஆசிரியர்களுடன் இன்முகத்துடனும் அன்பு கலந்த கண்டிப்புடனும் தாங்கள் அணுகுவதன் மூலம் எல்லோருடைய உள்ளங்களிலும் இடம் பிடித்துள்ளீர்கள். திறமையும், வினைத்திறன் மிக்க செயற்பாடும் பெற்ற தாங்கள் எமது பாடசாலையின் பரிசளிப்பு விழாவிற்கு வருகை தந்தது, பெரும் பாக்கியமெனக் கருதுகின்றோம். தாங்கள் ஓய்வு காலத்தில் சகல செல்வங்களுடன் நீண்ட காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

சிறப்பு விருந்தினராக வருகை தந்து சிறப்பிக்கும் எமது பாடசாலை முன்னாள் அதிபரான திருமதி கமலாம்பிகை சுப்பிரமணியம் அம்மா அவர்களே,

அன்று சிறந்த கல்லூரியாக மிளிர்ந்த காங்கேசன் துறை நடேஸ்வராக் கல்லூரியில் ஆரம்பக் கல்வி தொடக்கம் க.பொ.த (உ/த) வரை கல்வி கற்றீர்கள். ஆசிரியப் பணியை மேற்கொண்ட தாங்கள் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் ஆசிரியர் பறிற்சியை நிறைவு செய்த பின்னர், ஆசிரியராகவும், அதிபராகவும், ஆசிரிய ஆலோசகராகவும் பல இடங்களில் கடமையாற்றினீர்கள். சிறந்த ஆசிரியருக்கான விருதினைப் பெற்றக் கொண்ட தாங்கள்

1994ம் ஆண்டு எமது பாடசாலை அதிபராகப் பொறுப்பேற்றீர்கள். உக்கிரமான போரின் வடுக்களைத் தாங்கி நின்ற எமது வித்தியாலத்தினை பொறுப்பேற்று நடாத்த யாருமே முன்வராத நிலையில், 'என்னால் முடியும்' என்ற தன்னம்பிக்கையுடன் தாங்கள் அதிபர் பொறுப்பை ஏற்றுக் கொண்டமை போற்றத்தக்கதும் பாராட்டப்பட வேண்டியதும் நினைவு கூறப்படத்தக்கதுமாகும்.

எமது பாடசாலை விமானக் குண்டுத் தாக்குதலுக்குள்ளாகி, பாடசாலைக் கட்டடங்கள் சின்னாபின்னப்பட்டு சிதைவடைந்த தருணத்தில், ஆரம்பக் கல்வி வகுப்புக்கள் கொக்குவில் ஸ்தான சி.சி.த.க.பாடசாலையிலும், இடைநிலை பிரிவு வகுப்புக்கள் வளர்மதி முன்பள்ளியிலும், நடைபெற ஒழுங்கு செய்து மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் தங்கு தடையின்றி நடைபெற வழிவகை செய்தீர்கள். அத்துடன் இப்பாடசாலை நலன் விரும்பிய, மில்க்வைற் தொழிலகத்தின் ஆதரவுடன் தற்காலிக கொட்டகைகளை அமைத்து கல்விச் செயற்பாடுகள் மீண்டும் இப் பாடசாலையிலேயே நடைபெற குறுகிய காலத்தில் வழி வகுத்தீர்கள்.

தங்களின் கடின உழைப்பினால் பாடசாலை, கல்வியில் மட்டுமல்லாது இணைப்பாட விதான செயற்பாடுகளிலும் வளர்ச்சி கண்டது. தாங்கள் அதிபராகக் கடமையாற்றிய காலத்தில் மாணவர்களின் நடன நிகழ்ச்சி, ரூபவாகினி தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டமை வரலாற்றுப் பதிவாகும். தங்களது காலத்தில் வித்தியாலயம் வைரவிழா கண்டு மகிழ்ந்தது. தங்கள் ஆளுமைத் திறனால் அதிபர் பதவியில் இருந்து ஆரம்பப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளராக பதவியுயர்வு பெற்று சிறப்பான சேவையாற்றினீர்கள். ஓய்வு பெற்று குடும்பத்தாருடன் மகிழ்ந்திருக்கும் தாங்கள், சகல செல்வங்களுடன் நீண்ட காலம் வாழ வாழ்த்துகின்றேன்.

எமது பாடசாலையில் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் வினைத்திறனுடன் முன்னெடுக்கப்படுவதற்கு கைகொடுத்து நிற்கும் கல்விப் புலத்துப் பெரியோர்களே, கல்வித் திணைக்கள அதிகாரிகளே, உங்களது ஆலோசனைகளும் பாராட்டுதல்களும் எமது பாதையைச்

செப்பனிட்டுத் தரும். உங்கள் சேவை எமக்குத் தேவை என வேண்டிக் கொள்கின்றேன்.

அயற் பாடசாலை அதிபர்களே, ஆசிரியர்களே, இப்பாடசாலை முன்னாள் ,அதிபர்களே ஆசிரியர்களே, எம் அழைப்பையேற்று வருகை தந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் உங்களை அன்போடு வரவேற்கின்றேன்.

எனது பணிகளுக்கு பக்கபலமாக செயற்பட்டுக 'கொண்டிருக்கம் அன்பு மிக்க ஆசிரியர்களே, உங்கள் அனைவரையும் பாராட்ட வேண்டியது எனது தலையாய கடமையாகும். எமது பாடசாலை மாணவர்கள் பெறும் சாதனைகளுக்கு நீங்களே காரண கர்த்தாக்கள். பொதுப் பரீட்சைப் பெறுபேறுகள் மாணவர்களின் கல்வி அடைவ மட்டத்தைப் பறைசாற்றுவன. 2013ம் ஆண்டு க.பொ.த (சா..த) பரீட்சையில் பல பாடங்களில் எமது மாணவர்கள் 100% சித்தியைப் பெற்றிருந்ததுடன் 70% திற்கு அதிகமான மாணவர்கள் உயர்தர வகுப்புக்களில் வேறு பாடசாலைகளில் கல்வி கற்கின்றமை, இங்கே குறிப்பிட வேண்டிய விடயமாகும். அத்துடன் ஐந்தாந் தர புலமைப் பரீட்சையிலும் எமது மாணவர்கள் சித்தி பெற்று வருகின்றனர். தம்மை நம்பி வரும் மாணவர்களை வாஞ்சையுடன் அரவணைத்து அறிவுடன் நற்பண்புகளை நல்கும் உங்கள் பணியை பாராட்டுவதோடு. உங்கள் வாழ்க்கை சிறப்படைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

அன்பிற்கினிய பெற்றோர்களே!

இன்று தங்களின் குழந்தைகள் பரிசு பெறுவதை பாக்கியமாகக் கருதி இங்கு வருகை தந்தமை மிக்க மகிழ்ச்சியைத் தருகின்றது. இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள், என்று யாவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டாலும் சிறுவர் வாழ்வதற்கு இன்றைய சூழல் பல இன்னல்களைக் கொண்டிருப்பதை நாம் அனைவரும் அறிவோம். இவ்வகையில் பெற்றோர்கள் எந்த வேளையிலும் பிள்ளைகளில் அன்பும் கரிசனையும்உள்ளவர்களாக இருத்தல் வேண்டும். ஒற்றுமைமிக்க குடும்பத்தில் தான், பிள்ளை தனது

அங்கத்துவம் மதிக்கப்படுவதை உணர்ந்து, நல்ல பிரசையாக உருவாக முடியும். சிறு பராயத்திலேயே நல்ல விழுமியங்களையும் குறிக்கோள் உள்ள எதிர்காலத்தைப் பற்றியும் தெளிவாகக் அறிந்து கொள்ள வேண்டும். பெற்றோருக்கு இதில் பூரண பங்குண்டு. பிள்ளைகள் பாதுகாப்பு, மிகவும் தேவை மிக்கது என்பதை உணர்ந்து, நடந்து கொள்ளுங்கள்.உங்கள் பிள்ளைச் செல்வங்கள் கல்வியிலே உயர்நிலை பெற வேண்டும் என்ற கருத்திற்கு மாற்றுக் கருத்து இருக்க முடியாது.ஆனால் பிள்ளைகள் சலிப்படையாது கல்வி கற்கும் சூழலை ஏற்படுத்திக் கொடுப்பது பெற்றோர்களாகிய உங்கள் பொறுப்பாகும். உங்கள் பிள்ளைகளின் கல்விச் செயற்பாட்டிற்காக தூர இடத்து நகர்ப்புற பாடசாலைகளுக்கு அனுப்புவதை தவிர்த்து உள்ளூர் பாடசாலைகளில் பிள்ளைகளைச் சேருங்கள். உங்கள் பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்திற்கு எமது பாடசாலை போன்ற சிறிய உள்ளூர் பாடசாலைகள் களம் அமைத்துக் கொடுக்கும் என்பதை கூறிக்கொள்ள விரும்புகின்றேன். இத்தருணத்தில் உங்களை மகிழ்வுடன் வரவேற்றுக் கொள்கின்றேன்.

அன்புக்கினிய பழைய மாணவர்களே, நலன் விரும்பிகளே,

பல்வேறு தருணங்களில் பாடசாலைத் தேவையையும், வளர்ச்சியையும் கருத்தில் கொண்டு அவ்வப்போது ஆலோசனைகளையும் உதவிகளையும் வழங்கி பாடசாலையின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து வருகின்றீர்கள். தொடர்ந்து வரும் காலங்களிலும் உங்கள் பங்களிப்பு இருக்குமென உறுதியாக நம்பி இத்தருணத்தில் உங்களை மகிழ்வுடன் வரவேற்றுக் கொள்கின்றேன்.

எமது ஒவ்வொரு நிகழ்விலும் தவறாது கலந்து, எம்மில் ஒருவராக பங்களிப்புச் செய்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் ஸ்தாபகர் குடும்பத்தைச் சேர்ந்த திரு, திருமதி அருமைத்துரை ஐயா குடும்பத்தினரையும் வரவேற்பதில் பெருமகிழ்வடைகின்றேன்.

அன்புக்கினிய மாணவச் செல்வங்களே. நீங்கள் வருங்காலத் தலைவர்கள் என்பதை மறந்து விடாதீர்கள் . இன்று பலர் பரிசில் பெறுவது கண்டு, மற்றவர்கள் சோர்வடையாது தன்னம்பிக்கையுடன் கல்வியில் ஊக்கமாக இருங்கள். "முயன்றால் முடியாதது எதுவும் இல்லை". இதுவே உங்கள் தாரக மந்திரமாக அமையட்டும். "கல்வியும் ஒழுக்கமும் இரு கண்கள்" என்பதை நினைவில் கொண்டு பெற்றோர்கள், பெரியோர்கள், ஆசிரியர்கள் வழிநடத்தலை சிரமேற்கொண்டு செயற்படுங்கள்.

கல்விச்செயற்பாடுகள்

மாணவர் விபரம்

| தரம் | ஆண் | பெண் | தொகை |
|---|---|---|---|
| 1-5 | 22 | 17 | 39 |
| 6-11 | 49 | 33 | 82 |
| மொத்தம் | 71 | 50 | 121 |

அதிபர்,ஆசிரியர் விபரம்

| | | |
|---|---|---|
| 01. | செல்வி க. கமலநாயகி | (முதல்வர்,SLPS1) |
| 02. | திருமதி ப. சுந்தரலிங்கம் | விவசாய விஞ்ஞானம் |
| 03. | திருமதி ப. முருகதாஸ் | கணிதம் |
| 04. | திருமதி சா. குணேந்திரன் | ஆரம்பக்கல்வி |
| 05. | திருமதி ப. இராசவிசாகன் | சங்கீதம் |
| 06. | திருமதி ரே. சிவராசா | ஆரம்பக்கல்வி |
| 07. | திருமதி ச. மகேந்திரராசா | சமூக விஞ்ஞானம் |
| 08. | திருமதி தே. கணேசானந்தன் | கணிதம் |
| 09. | திருமதி த. காயாரோகணன் | தமிழ் |
| 10. | திருமதி தி. ஸ்ரீவிசயன் | விஞ்ஞானம் |
| 11. | செல்வி பு. கனகசபை | வர்த்தகம் |
| 12. | திருமதி வி. ஞானேந்திரன் | நடனம் |
| 13. | திருமதி ப. கிருஷ்ணதாசன் | ஆங்கிலம் |

| | | |
|---|---|---|
| 14. | திருமதி க. அருள்நாதன் | ஆரம்பக்கல்வி |
| 15. | திரு இ. தபானந்தன் | ஆரம்பக்கல்வி |
| 16. | திருமதி ப. லோறன்ஸ் | வர்த்தகம் |
| 17. | திருமதி வி. சிவபாலன் | ஆரம்பக்கல்வி |
| 18. | திருமதி ல. ஜீவகன் | வர்த்தகம் |
| 19. | திருமதி த. ரவிச்சந்திரன் | ஆரம்பக்கல்வி |
| 20. | திருமதி ப. ஸ்ரீஸ்கந்தன் | ஆங்கிலம் |
| 21. | திருமதி தே. யோகராஜா | (அலுவலக உதவியாளர்) |

## புதிதாக இணைக்கப்பட்டோர்

01. திருமதி வி. சிவபாலன் - ஆரம்பக்கல்வி
02. திருமதி த. ரவிச்சந்திரன் - ஆரம்பக்கல்வி
03. திருமதி ப. ஸ்ரீஸ்கந்தன் - ஆங்கிலம்
04. திருமதி ல. ஜீவகன் - வர்த்தகம் (தற்காலிக இணைப்பு)

## பாடசாலை அபிவிருத்திச்சங்கம் 2014

தலைவர்: செல்வி க.கமலநாயகி (அதிபர்)

செயலாளர்: திருமதி பா.லென்சி (பெற்றோர்)

பொருளாளர்: செல்வி பு. கனகசபை (ஆசிரியர்)

உறுப்பினர்கள் : திரு.இ.தபானந்தன்

திருமதி தி. ஸ்ரீவிஜயன்

திருமதி ப. கிருஷ்ணதாசன்

திரு க. கணேசலிங்கம்

திரு. இ. சுதர்சன்

திருமதி தே. வசந்தகுமாரி

திருமதி சி. சாந்தகுமார்

திரு அ. அகிலதாஸ் (கோட்டக் கல்விப்பணிப்பாளர்

## ஆசிரியர்கள் நலன்புரிக்கழகம் 2014

தலைவர் : திருமதி தி. ஸ்ரீவிஜயன்

செயலாளர்: திருமதி தே. கணேசானந்தன்

பொருளாளர்: திருமதி வி. ஞானேந்திரன்

### 2013 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றோர்

01. உ. டக்ஸனா -147
02. த. கிதுஷிகா- 137
03. ர. அபிநயா – 134
04. ர. லத்திக்கா- 132
05. தே. கிறிஸ்ரி- 121
06. ர. யதுஷா – 104

### தரம் 5 புலமைப் பரிசில் சித்தி (2014)

1. நாகேந்திரன் கலைநிலவன் - 156

### 2014 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றோர்

1. அ. சங்கவி - 148
2. ச. அபிர்சன் - 145
3. தெ. கஜப்பிரியன் - 135
4. த. விஸ்வா - 131
5. கு. தாரகன் - 130
6. செ.செந்துஜன் - 130
7. தெ.தரணிகன் - 120
8. உ.கம்சியா - 119
9. கு.தனஞ்சயன் - 110

2013ல் க.பொ.த(சா.த) சித்தி பெற்று க.பொ.த(உ.த) கற்பதற்கு வேறு பாடசாலை சென்றோர் விபரம்

01. செல்வி வி.ஜனனி

02. செல்வி வை. பிரசாந்தி

03 செல்வி.கு. பிருந்தா

04. செல்வி.ம.கஸ்தூரி

05. செல்வி ப.தனுஜா

06. செல்வன் க.சரண்ராஜ்

07. செல்வன் வி.விஜிகரன்

08. செல்வன் அ.புருஷாந்தன்

09. செல்வன்.து.தேனுஜன்

10. செல்வன் இ.பிரணவன்

11. செல்வன் க.கமலலோஜன்

12. செல்வன் க.நிதுஷன்

2014ல் க.பொ.த(சா.த) சித்தி பெற்று க.பொ.த(உ/த) கற்பதற்கு வேறு பாடசாலை சென்றோர் விபரம்

1. செல்வன் சே. மதியழகன்
2. செல்வன் சு. டிலக்ஷன்
3. செல்வி வி. விஜிதினி
4. செல்வி .யோ. தர்சனா

இணைப்பாட விதான செயற்பாடுகளில் பெருமை சேர்த்தோர்

1. சமூக விஞ்ஞானப்போட்டி( 2013 )

   1.செல்வன் சி. சர்மிலன கோட்ட வலய மட்டம் 1ம் இடம்

   2. செல்வி வி. ஜனனி கோட்ட வலய மட்டம் 1ம் இடம்

2. உலக உளவள நாள் நாடகப் போட்டி

   மாவட்டமட்டம் 1ம் இடம்(2013)

3. சைவநெறிப் போட்டி( 2013)

   பண்ணிசை தரம் 6

   செல்வி சி.தேனுஜா கோட்ட மட்டம் 1ம் இடம்

   பண்ணிசை தரம் 9

   செல்வன் பா. ஆதவன் கோட்ட மட்டம் 2ம் இடம்

   பண்ணிசை தரம் 11

   செல்வி ம.கஸ்தூரி கோட்ட மட்டம் 1ம் இடம்
   வலய மட்டம் 3ம் இடம்

   தோரணம் பின்னுதல்

   செல்வன் வி.விஜிகரன் கோட்ட மட்டம் 2ம் இடம்
   வலய மட்டம் 1ம் இடம்

4 சைவநெறிப்போட்டி (2014)

   பண்ணிசை தரம் 11

   செல்வி ச.விதுஷிகா கோட்ட மட்டம் 1ம் இடம்
   வலய மட்டம் 1ம் இடம்

5 மாற்றுத் திறனாளிகள் தினம் கட்டுரைப் போட்டி-2014

   செல்வன் இ. யதுஷன் கோட்ட மட்டம் 2ம்இடம்

6 விசேட தேவையுடைய மாணவர் சித்திரப் போட்டி

   செல்வன் க.செந்துஜன் கோட்ட வலய மட்டம் 1ம் இடம் (2014)

7 சமூக விஞ்ஞானப்போட்டி – 2014

   செல்வன் பி. லிதுகயன் கோட்ட வலய மட்டம் 1ம் இடம்

   செல்வன் இ. துஷிவர்த்தன் கோட்டம் 2ம் இடம்
   வலய மட்டம் 3ம் இடம்

செல்வன் சி. சர்மிலன் கோட்ட மட்டம் 1ம் இடம்
செல்வி வி. விஜிதினி

8 விவசாய அறிவுப்போட்டி– 2014

செல்வி வி. விஜிதினி கோட்ட மட்டம் 4ம் இடம்

9 கலாசார அலுவல்கள் மற்றும் அரச சிறுவர் ஓவிய விழா 2014 பாலர் பிரிவில் பாராட்டைப் பெற்றவர்கள் :

1. செல்வன் க. கிருஷிகன்
2. செல்வன் செ.ஜக்ஞுப்பிரிய சர்மா

## மன்றச் செயற்பாடுகள்

| மன்றச் செயற்பாடுகள் | பொறுப்பாசிரியர் பெயர் | தலைவர் | செயலாளர் |
|---|---|---|---|
| இந்து மன்றம் | திருமதி ப. இராசவிசாகன்<br>திருமதி வி. ஞானேந்திரன் | செல்வன் க.சிந்துஜன் | செல்வன்க.கிருஷாந்தன் |
| தமிழ் மன்றம் | திருமதி த. காயாரோகணன்<br>திருமதி வி. சிவபாலன் | செல்வன் இ.யதுஷன் | செல்வி க. அம்ஷா |
| கணித விஞ்ஞான மன்றம் | திருமதி ப. முருகதாஸ்<br>திருமதி தே. கணேசானந்தன்<br>திருமதி தி. ஸ்ரீவிஜயன் | செல்வி உ. லாவண்யா | செல்வி சோ . நிருசனா |
| ஆங்கில மன்றம் | திருமதி ப. கிருஷ்ணதாசன்<br>திருமதி ப. ஸ்ரீஸ்கந்தன் | செல்வன் இ.யதுஷன் | செல்வன் சு.சயந்தன் |
| சுகாதாரக் கழகம் | திருமதி ப. சுந்தரலிங்கம்<br>திருமதி வி. ஞானேந்திரன் | செல்வன் உ.ஹரியெனன் | செல்வி உ. பிரியங்கா |
| அழகியல் மன்றம் | திருமதி ப. இராசவிசாகன்<br>திருமதி வி. ஞானேந்திரன்<br>திருமதி ப. லோறன்ஸ் | செல்வன் பா.ஆதவன் | செல்வி ம. சர்விகா |
| சமூக விஞ்ஞான மன்றம் | திருமதி ச. மகேந்திரராசா<br>திருமதி ப.லோறன்ஸ் | செல்வன் க. கஜானன் | செல்வி யோ . பகிர்தா |

பாடசாலையின் கல்விச் செயற்பாடுகளுக்கு இந்த மன்றங்களும் கழகங்களும் உறுதுணை புரிகின்றன. இம்மன்றங்களின் செயற்பாட்டக்குப் பொறுப்பாக இருக்கும் ஆசிரியர்களுக்கு எனது பாராட்டுக்கள் உரித்தாகட்டும்.

## பாடசாலை பௌதீக வள அபிவிருத்திக்கு உதவியவர்களும் ஏனைய அனுசரணையாளர்களும்

மதில் வேலை

1. எமது பாடசாலையில் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியிலிருந்து கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி அவர்கள் வழங்கிய ரூபா ஒரு இலட்சத்திலிருந்து சுற்று மதிலின் ஒரு பகுதி கட்டப்பட்டது.
2. மதிலின் மிகுதிப்பகுதி 2013ம் ஆண்டு வடமாகாண விவசாய அமைச்சர் கௌரவ பொ. ஐங்கரநேசன் அவர்கள் நிதி ஒதுக்கீட்டிலிருந்து கிடைக்கப்பெற்ற இரண்டு இலட்சத்து இருபத்தையாயிரத்தில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இன்னும் 350 அடி நீளமான மதில் கட்டி முடிக்கப்பட வேண்டியுள்ளதை இங்கு நினைவுபடுத்திக் கொள்கின்றேன்.
3. மேலும் விவசாய விஞ்ஞானம் பாடம் செய்முறை விளக்கத்துடன் அமைவதால் மாணவர்கள் தோட்டப் பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்கு வசதியாக சொட்டு நீர்ப்பாசன வசதி ஏற்படுத்தப்பட்டது. இந்த சொட்டு நீர்ப்பாசன வசதியை யாழ் பல்கலைக்கழக மருத்துவபீட 4ம் வருட மாணவி செல்வி அனித்தா கூல் அவர்கள் தனது செயற்திட்டத்திற்காக அமைத்து உதவியமை பாராட்டத்தக்க விடயமாகும்.
4. இன்னும் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன் அவர்களின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியிலிருந்து 2014ல் எமது பாடசாலைக்கு தொலைக்காட்சிப் பெட்டி ஒன்று வழங்கப்பட்டுள்ளது.
5. வடமாகாண விவசாய அமைச்சர் கௌரவ பொ. ஐங்கரநேசன் அவர்கள் நிதி ஒதுக்கீட்டிலிருந்து 2015ல் DVD சாதனம் ஒன்றும் வழங்கப்பட்டுள்ளது.

6. எமது பாடசாலைக்கு மாகாண சபை உறுப்பினர் உயர் திரு பா. கஜதீபன் வழங்கிய எழுபத்தையாயிரம் நிதியிலிருந்து, கம்பி வலைகளுக்கு வர்ணம் பூசுதல், விஞ்ஞான ஆய்வு கூடத்திற்கு வர்ணம் பூசுதல் ஆகிய சிறு திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டன.
7. திருமதி த. காயாரோகணன் இரும்பலுமாரி ( சிறியது )
8. திரு இ. சத்தியநாதன் குடும்பம்

வருடாந்தம் விளையாட்டுப் போட்டிக்கான பந்தல் உதவி

9. திரு ஐ. சிவபாலன் விளையாட்டுப் போட்டிக்கான நிதியுதவி ரூபா 5000.00
10. பாடசாலை அதிபர் செல்வி க. கமலநாயகி
    1. சிறுவர் தின விழா மாணவருக்கான அன்பளிப்பும், மதிய உணவு வழங்களும்
    2. ஆசிரிய தினத்திற்கு ஆசிரியருக்கான கேடயம் வழங்கல்
11. திருவாளர் அருமைத்துரை ஐயா குடும்பம் ஆசிரியர் தின அன்பளிப்பு

எமது பாடசாலை பௌதீக வள அபிவிருத்திக்கு மட்டுமல்லாது, மாணவர்களுக்கு போசாக்குணவு வழங்கும் செயற்பாட்டுக்கு உதவிக்கரம் நீட்டியவர்கள் பலராவர். அரும்பசி தீர்க்கும் இப்பணிகளைப் பாராட்டுவதோடு இப்பணி மேலும் தொடர வேண்டு மென வேண்டிக்கொள்கிறேன்.

போசாக்குணவு வழங்குவதற்கு உதவியோர்

01. திருமதி நல்லைநாதன் குடும்பம்
02. திருமதி ப. முருகதாஸ் தாயார் திருமதி த.தம்பிராசா நினைவாக
03. திருமதி ப.லோறன்ஸ் கணவர் நினைவாக
04. திருமதி வி. சிவபாலன் மாமியார் நினைவாக
05. திருமதி வி. கடம்பமலர் தந்தையார் சரவணபவன் நினைவாக
06. திருமதி உமா நிர்க்குணன் - பிறந்த தினம் ( சாயி நிலைய இணைப்பாளர் திரு. சி.சிவநேசன் அவர்கள் ஊடாக வழங்கப்பட்டது.)
07. அகமட் ஆதில் - பிறந்த தினம்

08. திரு செ. இராசேந்திரம் - பிறந்த தினம்
09. திரு வ. முரளிதரன் (ஆசிரியர்)
10. ஒரு பானை நிதி நாளொன்றுக்கு நூற்றைம்பது ரூபா

இவ்வருடம் க.பொ.த. சாதாரண தரம் கற்கும் மாணவர்கள் ஆசிரியர் தினத்தை யொட்டி ஆசிரியர்களைக் கௌரவித்து ஒவ்வொரு மரக் கன்றுகளை வழங்கி அவர்களைக் கொண்டு பாடசாலை வளவில் நாட்டியுள்ளனர். இது முன்மாதிரியான செயற்பாடாகும். இச் செயற்பாட்டைப் பாராட்டுவதோடு, அவர்கள் பரீட்சையில் சித்தி பெற வேண்டும் என வாழ்த்துகின்றேன். தரம் 6ம் வகுப்பு மாணவர்கள் தென்னங்கன்றுகளை நாட்டியும் பாடசாலைக்கு வளம் சேர்த்துள்ளனர். 2014ம் ஆண்டு மரநடுகை வாரத்தையொட்டி வடமாகாண விவசாய அமைச்சர் கௌரவ பொ. ஐங்கரநேசன் அவர்களால் மரநடுகை மேற்கொள்ளப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

எமது பாடசாலையில் கருணையுள்ளம் படைத்த வள்ளன்மை மிக்கவர்கள் தமது உதவிக்கரங்களால் நிதியங்களை ஆரம்பித்து நிறை அறிவு, நற்பண்புகள் நிறைந்த எதிர்கால சந்ததியினரை உருவாக்க தங்களால் முடிந்த உதவிகளைச்செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

## பாடசாலைத்தேவைகள்

01. தரம் 3,4,5 வகுப்புக்களின் கூரையை சீர் செய்தல்
02. மாணவர், ஆசிரியர் வாகனத்தரிப்பிடம் அமைத்தல்
03. பாடசாலை எல்லையில் 350 அடிவரை மதில் அமைத்தல்
04. கட்டப்பட்ட மதிலுக்கு பூச்சு வேலை செய்தலும் வர்ணம் பூசுதலும்
05. மண்டபத்திற்கான பிளாஸ்ரிக் கதிரைகள்
06. விளையாட்டு மைதானம் சீரமைத்துப் புற்கள் பதித்தல்
07. விளையாட்டு உபகரணங்கள்
08. பாடசாலைக்கட்டிடங்களுக்கு வர்ணம் பூசுதல்
09. வகுப்பறைகளுக்கான அலுமாரிகள்
10. வகுப்பறைகளுக்கு பூரணமான மின் இணைப்பு
11. நூலகத்திற்கான நூல்கள்
12. பாடசாலைக்கு பல்லூடகத்தொகுதி

13. ஆசிரியர்களுக்கான மடிக்கணினிகள்
14. ஆசிரியர் ஓய்வு அறை அமைத்தல்
15. பாடசாலைக்காவலாளி, சுகாதாரத்தொழிலாளி நியமித்தல்

பாடசாலை மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்கு உதவுவோர்

01. ஸ்தாபகர் அமரர் இ.தம்பித்துரை அவர்களின் கல்வி அபிவிருத்தி நிதியம்
    1. க.பொ.த. சாதாரண தரம் சித்தி பெற்று வேறு பாடசாலைகளில் க.பொ.த. உயர்தரம் கற்கும் மாணவர்களின் பொருளாதார நிலை கருதி நான்கு மாணவர்களுக்கு மாதாந்தம் 500 ரூபா உதவு தொகை வழங்கப்படுகின்றது.
    2. தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்று தொடர்ச்சியாக இப்பாடசாலையில் கல்வி கற்று வரும் செல்வன் இ.துஷிவர்த்தன் (தரம் 9), செல்வன் நா.கலைநிலவன் (தரம் 6) ஆகியோருக்கு மாதாந்தம் 500 ரூபா உதவுதொகை வழங்கப்படுகின்றது.

02. இப்பாடசாலையின் பழைய மாணவன் திரு கந்தையா ரவீந்திரன் அவர்கள் தந்தையை இழந்த 5 மாணவர்களுக்கு மாதாந்தம் 500 ரூபா உதவு தொகையாக வழங்கி வருகின்றார்.

நன்றி நவில்கின்றேன்

இன்றைய பரிசுத்தின விழா நிகழ்விலே பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்பித்து எம்மை மட்டற்ற மகிழ்ச்சியில் திளைக்கச்செய்து எம்மாணவச் செல்வங்களுக்கு பரிசில்கள் வழங்கவிருக்கும் கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர் உயர்திரு ஈஸ்வரபாதம் சரவணபவன் அவர்கள் தனது பொன்னான நேரத்தை எமக்காக தந்திருக்கின்றார். அவர்களுக்கு பாடசாலை சமூகம் சார்பாக மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இன்றைய விழாவில் எமது அழைப்பை ஏற்று சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டிருக்கும் ஓய்வு நிலை மாகாணக்கல்வித் திணைக்கள பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருவாளர் தம்பையா இராசலிங்கம் அவர்களுக்கும், கொழும்பிலிருந்து வருகை தந்து சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டிருக்கும் ஒய்வுநிலை ஆரம்பக்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி கமலாம்பிகை சுப்பிரமணியம் அவர்களுக்கும் இதயங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் இப்பாடசாலை நிர்வாகத்தை சிறப்பாக நடாத்துவதற்கு வேண்டிய ஆலோசனைகள் வழிகாட்டல்களை வழங்கி வரும் கல்விப் புலம்சார்ந்த சான்றோர்களுக்கும், அதிகாரிகளுக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும். இப்பரிசுத்தின விழாவிற்கு வருகை தந்துள்ள அயற் பாடசாலை அதிபர்கள் ஆசிரியர்கள், ஏனைய விருந்தினர்கள் அனைவருக்கும் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன்.

இப்பாடசாலை கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுக்கும். இணைப் பாடவிதானச் செயற்பாடுகளுக்கும், அயராது உழைத்து வரும் இப்பாடசாலை ஆசிரியர்களுக்கும் கல்வியில் ஊக்கங்காட்டி பரிசில்களைத் தட்டிச் சென்ற மாணவர்களுக்கும் அன்பு மிக்க ஏனைய மாணவர்களுக்கும் விழாவில் நிகழ்ச்சிகளை வழங்கிய மாணவர்களுக்கும் நன்றிகளைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். இவ்வருட ஆசிரிய தின விழாவில் பிரதம விருந்தினராக கலந்து ஆசிரியர்களைக் சிறப்பாகக் கௌரவித்தமை தொடர்பாக பாடசாலை சார்பில் ஸ்தாபகர் குடும்பத்தைச் சேர்ந்த திரு, திருமதி அருமைத்துரை ஐயா குடும்பத்தினருக்கு நன்றியைத் தெரிவிப்பதில் பெரு மகிழ்வடைகின்றேன். எமது பாடசாலைப் பணிகளுக்கு உதவி தேவைப்படும் போதெல்லாம் உதவி செய்து வரும் பாடசாலை அபிவிருத்திக் குழு உறுப்பினர்களுக்கும், இப்பரிசுத்தின அறிக்கையை நேர்த்தியாக அச்சுப்பதித்து வழங்கிய பிரகாந் அச்சகத்தாருக்கும் ஒலி, ஒளி அமைப்புச் செய்துதவியவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

இன்னும் பல வகையிலும் உதவி புரிந்த நல்லுள்ளங்களுக்கு எனது மனம் நிறைந்த நன்றிகளை நல்கி அதிபர் அறிக்கையை நிறைவு செய்து கொள்வதில் பெருமகிழ்வடைகின்றேன்.

யா/ கொக்குவில் ஸ்ரீஇராமகிருஷ்ண வித்தியாசாலை

பரிசு பெறுவோர் விபரம் 2013

தரம்: 01

01. சி.நிஷாகரன் - கணிதம், சமயம், சுற்றாடல், தமிழ்மொழி 1ம் இடம்.

02. பா.தனோஜன் - கணிதம், தமிழ்மொழி, சுற்றாடல், சமயம் 2ம் இடம்.

03. சி. டினோஜன் - கணிதம், தமிழ்மொழி 3ம் இடம்.

04. ச.மோகனா - சுற்றாடல், சமயம் 3ம் இடம்.

தரம்: 02

01. ப. யதிவர்ணன் - கணிதம், தமிழ்மொழி, சமயம் 1ம் இடம், சுற்றாடல் 2ம் இடம்.

02. பா. பிரணவன் - தமிழ்மொழி 1ம் இடம் சுற்றாடல், சமயம் 3ம் இடம்.

03. ச. வேணுஜன் - சுற்றாடல் 1ம் இடம், சமயம் 2ம் இடம்.

04. ம. தமிழ்நிலா – கணிதம், 2ம் இடம்.

05. ர. பிரியங்கா - கணிதம் 3ம் இடம்.

06. நா. நிலக்ஷிகா- தமிழ் 3ம் இடம்.

தரம்: 03

01. இ.ஜஸ்வின் - கணிதம்,சமயம், சுற்றாடல், தமிழ்மொழி 1ம் இடம் ஆங்கிலம் 2ம் இடம்.

02. சி. பிரியந்தன் - ஆங்கிலம் 1ம் இடம், கணிதம், சமயம், சுற்றாடல், தமிழ்மொழி 2ம் இடம்.

03. சு.துவாரகன் - கணிதம், சமயம், சுற்றாடல், தமிழ்மொழி ஆங்கிலம் 3ம் இடம்.

தரம்: 04

01. அ.சங்கவி - கணிதம், சுற்றாடல், தமிழ்மொழி ஆங்கிலம் 1ம் இடம். சமயம் 2ம் இடம்.

02. ச. அபீர்சன் - கணிதம்,சுற்றாடல், தமிழ்மொழி 2ம் இடம், சமயம், ஆங்கிலம் 3ம் இடம்.

03. செ.செந்துஜன் - ஆங்கிலம் 2ம் இடம், கணிதம் 3ம் இடம்.

04. நா.கலைநிலவன் - சமயம் 1ம் இடம், தமிழ் 3ம் இடம்.

05. தெ.கஜப்பிரியன் - சுற்றாடல், 3ம் இடம்.

தரம்: 05

01 த.கிதுசிகா -கணிதம், சமயம், சுற்றாடல், ஆங்கிலம் 1ம் இடம் தமிழ் 2ம் இடம்.

02 ர.அபிநயா - சுற்றாடல், சமயம் 2ம் இடம், ஆங்கிலம் 3ம் இடம்.

03 ர.லத்திக்கா - தமிழ்மொழி 1ம் இடம். ஆங்கிலம் 2ம் இடம், கணிதம், சமயம் 3ம் இடம்.

04 உ.டக்ஸனா - கணிதம் 2ம் இடம், தமிழ்மொழி 3ம் இடம்.

05 தே.கிறிஸ்ரி- சுற்றாடல், 3ம் இடம்.

2013 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றோர்

01. உ .டக்ஸனா - 147
02. த. கிதுஷிகா - 137
03. ர. அபிநயா — 134
04. ர. லத்திக்கா - 132
05. தே. கிறிஸ்ரி - 121
06. ர.யதுஷா — 104

தரம்: 06

01 ச. மதுஷா- கணிதம், சமயம், தமிழ்மொழி, விஞ்ஞானம், வரலாறு, புவியியல், குடியுரிமை, சுகாதாரம், நடனம் 1ம்இடம், ஆங்கிலம் 2ம்இடம், தொழில்நுட்பம் 3ம்இடம்.
02 உ. லாவண்யா - தொழில்நுட்பம் 1ம்இடம், தமிழ்மொழி, வரலாறு, குடியுரிமை, சுகாதாரம், நடனம் 2ம்இடம். கணிதம் விஞ்ஞானம், புவியியல் 3ம்இடம்.
03 ச. நிதுஷன் - கணிதம், விஞ்ஞானம், புவியியல் 2ம்இடம், வரலாறு, குடியுரிமை, சுகாதாரம் 3ம்இடம்.
04 வ. யதுர்ஷனா - சமயம், தொழில்நுட்பம் 2ம்இடம், தமிழ்மொழி 3ம்இடம்.
05 த. பிரியங்கா - ஆங்கிலம் 1ம்இடம், சங்கீதம் 3ம்இடம்
06 வி. விதுஷா - சங்கீதம் 1ம்இடம்
07 சி. தேனுஜா - சங்கீதம் 2ம்இடம்,சமயம் 3ம்இடம்
08 ஸ்ரீ. சதுர்த்திகா- சங்கீதம் 3ம்இடம்.
09 ர. டென்சிகா - நடனம் 3ம்இடம்

தரம்: 07

1. இ.துஷிவர்த்தன் - கணிதம், விஞ்ஞானம், புவியியல், தமிழ்மொழி, வரலாறு, சுகாதாரம், தொழில்நுட்பம் சங்கீதம் 1ம்இடம், சமயம் 2ம்இடம்,‘
2. சு.சிந்துஷன் - ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், குடியுரிமை, சுகாதாரம், சங்கீதம் 2ம்இடம், தமிழ்மொழி, வரலாறு, தொழில்நுட்பம் 3ம்இடம்.
3. யோ.பகிர்தா – சமயம், குடியுரிமை 1ம்இடம். தமிழ்மொழி, வரலாறு 2ம்இடம், புவியியல் 3ம்இடம்.
4. சோ. நிரூசனா - புவியியல், தொழில்நுட்பம் 2ம்இடம், கணிதம், விஞ்ஞானம், சுகாதாரம் 3ம்இடம்.
5. த. மிலானி - ஆங்கிலம், நடனம் 1ம்இடம். தமிழ்மொழி 3ம்இடம்.
6. சி.சுகிந்தா – சமயம் 3ம் இடம்.
7. ச.துளசிகா - சங்கீதம் 3ம்இடம்.

தரம்: 08

1. சி.சர்மிலன் - குடியுரிமை, கணிதம், சமயம், தமிழ்மொழி, விஞ்ஞானம், வரலாறு, புவியியல், சுகாதாரம், நடனம், தொழில்நுட்பம், ஆங்கிலம் 1ம்இடம்.
2. சு.சயந்தன் - விஞ்ஞானம், புவியியல், குடியுரிமை, சுகாதாரம், நடனம், தொழில்நுட்பம் 2ம் இடம். கணிதம் சமயம், தமிழ்மொழி, வரலாறு 3ம்இடம்.
3. இ. யதுஷன் - சங்கீதம் 1ம்இடம் கணிதம், சமயம், தமிழ்மொழி, விஞ்ஞானம், வரலாறு 2ம் இடம். புவியியல், குடியுரிமை, சுகாதாரம், தொழில்நுட்பம் 3ம்இடம்.
4. ர. அஜித்தா - சங்கீதம் 2ம்இடம்.

தரம்: 09

1. ச.அம்ஷா - கணிதம், சமயம், தமிழ்மொழி, விஞ்ஞானம், வரலாறு, புவியியல், குடியுரிமை, சுகாதாரம், தொழில்நுட்பம், சங்கீதம் 1ம்இடம்.
2. ம. சர்விகா - நடனம் 1ம் இடம், சமயம், வரலாறு, தொழில்நுட்பம், குடியுரிமை 3ம்இடம்.
3. கு. மனோஜித் - ஆங்கிலம். 1ம்இடம், தமிழ்மொழி, குடியுரிமை, சுகாதாரம் 2ம்இடம்.
4. உ . ஹரியெனன் - புவியியல், ஆங்கிலம் 2ம்இடம். தமிழ்மொழி, சுகாதாரம், கணிதம் 3ம்இடம்.
5. சா . அனுசன் - கணிதம் , விஞ்ஞானம், 2ம்இடம், புவியியல், சுகாதாரம், சங்கீதம் 3ம்இடம்.
6. உ . பிரியந்தினி - தொழில்நுட்பம் 3ம்இடம்.
7. பா . ஆதவன் - சங்கீதம் 2ம்இடம்.
8. பா . சிவாஜனா - சமயம் 3ம் இடம்.

தரம்: 10

1. வி . விஜிதினி - கணிதம், தமிழ்மொழி, விஞ்ஞானம், வரலாறு, விவசாயம் 1ம்இடம், சமயம், சங்கீதம் 2ம்இடம்.
2. ச.விதுஷிகா - சமயம், சங்கீதம் 1ம்இடம், தமிழ்மொழி 3ம்இடம்.
3. சு.டிலக்ஸன் - கணிதம், தமிழ்மொழி 2ம்இடம் , சமயம் 3ம் இடம்.
4. யோ. தர்சனா- விவசாயம் 2ம்இடம்
5. இ.கீர்த்திகா - விவசாயம் 2ம்இடம்.

க.பொ.த (சாதாரண )2013 டிசம்பர்

1. வி.ஜனனி -5A 3B S
2. க.சரண்ராஜ்- 2A 2B C 3S
3. வி.விஜிகரன் - 2A B C 4S
4. வை. பிரசாந்தி A 2B 3C 2S
5. கு. பிருந்தாA 2B 3C 2S
6. அ.புருஷோந்தன் A B 4C 2S
7. து.தேனுஜன் A B 4C 3S
8. இ.பிரணவன் A 2B 3C 2S
9. க.கமலலோஜன் A 2B 3C 3S
10. ம.கஸ்தூரிA B 3C 2S
11. க.நிதுஷன் A 4C 4S

பரிசு பெறுவோர் விபரம் - 2014

தரம்: 01

1. உ . மதன் - சுற்றாடல், சமயம் 1ம் இடம், தமிழ்மொழி 2ம் இடம்.
2. ர . விதுசன் - தமிழ்மொழி 1ம் இடம், கணிதம், சுற்றாடல், 2ம் இடம், சமயம் 3ம் இடம்.
3. க . கிருசிகன் - சமயம் 2ம் இடம், சுற்றாடல், 3ம் இடம்.
4. மொ . அகமட் ஆதில் - கணிதம் 1ம் இடம், தமிழ் 3ம் இடம்.
5. ரா . பவனிஷா - கணிதம் 3ம் இடம்.

தரம்: 02

1. சி. நிஷாகன்- சமயம், சுற்றாடல், தமிழ்மொழி 1ம் இடம், கணிதம் 2ம் இடம்.
2. பா. தனோஜன் - கணிதம் 1ம் இடம், தமிழ்மொழி, சுற்றாடல், சமயம் 2ம் இடம்.
3. ச. மோகனா - கணிதம், தமிழ் 3ம் இடம்.
4. வி. வினுதா- சமயம், சுற்றாடல் 3ம் இடம்.

தரம்: 03

1. ச . வேணுஜன் - சமயம், சுற்றாடல், தமிழ்மொழி 1ம் இடம், ஆங்கிலம் 2ம் இடம், கணிதம் 3ம் இடம்.
2. பா. பிரணவன் - கணிதம் 1ம் இடம், தமிழ்மொழி ஆங்கிலம் 3ம் இடம்.
3. ப. யதிவர்ணன் - கணிதம், தமிழ்மொழி, சமயம், சுற்றாடல் 2ம் இடம்.
4. சி . சுபாகரன் - ஆங்கிலம் 1ம் இடம், சுற்றாடல் 3ம் இடம்.
5. நா . நிலக்ஷிகா - சமயம் 3ம் இடம்.

தரம்: 04

1. இ . ஜஸ்வின் - சமயம், சுற்றாடல், தமிழ்மொழி 1ம் இடம் ஆங்கிலம், கணிதம் 2ம் இடம்.
2. சி . பிரியந்தன் - ஆங்கிலம், கணிதம் 1ம் இடம், தமிழ்மொழி, சுற்றாடல், 2ம் இடம், சமயம் 3ம் இடம்.
3. வ . தமிழ்ப்பிரியன் - சமயம் 2ம் இடம், தமிழ்மொழி, சுற்றாடல், கணிதம் 3ம் இடம்,
4. சு . துவாரகன் - ஆங்கிலம் 3ம் இடம்.

தரம்: 05

1. அ . சங்கவி - கணிதம், சுற்றாடல், தமிழ்மொழி 1ம் இடம், ஆங்கிலம், சமயம் 2ம் இடம்.
2. நா. கலைநிலவன் - சமயம் 1ம் இடம், கணிதம், சுற்றாடல், தமிழ்மொழி 2ம்இடம், ஆங்கிலம் 3ம் இடம்.
3. செ . செந்துஜன் - ஆங்கிலம் 1ம் இடம்.
4. த . விஸ்வா - சுற்றாடல் 3ம் இடம்.
5. கு. தாரகன் - கணிதம், சமயம் 3ம் இடம்.
6. தெ . கஜப்பிரியன் - தமிழ்மொழி 3ம் இடம்,

தரம் : 06

1. க . கஜானன் - கணிதம், தமிழ்மொழி, விஞ்ஞானம், வரலாறு, புவியியல், குடியுரிமை ,சுகாதாரம், சங்கீதம் 1ம்இடம்.
2. ர . லத்திக்கா - சமயம், ஆங்கிலம், தொழில்நுட்பம் 1ம் இடம், தமிழ்மொழி, விஞ்ஞானம், வரலாறு புவியியல் 2ம்இடம், குடியுரிமை ,சுகாதாரம் 3ம் இடம்.
3. சி . யதுஷா - கணிதம், ஆங்கிலம், சங்கீதம் 2ம் இடம், சமயம், விஞ்ஞானம் 3ம் இடம்.
4. தே . கிறிஸ்ரி – சித்திரம் 1ம் இடம், குடியுரிமை, சுகாதாரம் 2ம்இடம், தமிழ்மொழி, கணிதம், வரலாறு, தொழில்நுட்பம், 3ம் இடம்.
5. நா. உஷாந் - சித்திரம் 2ம்இடம்.
6. செ.காயத்திரி - புவியியல், சங்கீதம் 3ம் இடம்.
7. வி.யதுஷன் - சித்திரம் 3ம்இடம்

தரம்: 07

1. உ . லாவண்யா - கணிதம், தமிழ்மொழி, ஆங்கிலம், விஞ்ஞானம், வரலாறு ,புவியியல், குடியுரிமை, தொழில்நுட்பம், சுகாதாரம், நடனம் 1ம் இடம், சமயம் 2ம் இடம்.
2. வி . விதுஷா - சமயம், சங்கீதம் 1ம் இடம், தமிழ்மொழி, விஞ்ஞானம், புவியியல், குடியுரிமை, சுகாதாரம் 2ம் இடம்.
3. ர . டென்சிகா – வரலாறு 2ம் இடம், தமிழ்மொழி, புவியியல், தொழில்நுட்பம், நடனம் 3ம் இடம்.
4. த . பிரியங்கா - கணிதம் 2ம் இடம், விஞ்ஞானம், வரலாறு, சங்கீதம் 3ம்இடம்.
5. வ . யதுர்ஷனா - தொழில்நுட்பம், நடனம் 2ம் இடம், கணிதம் 3ம் இடம்.
6. ஶ்ரீ . சதுர்த்திகா - சங்கீதம் 2ம்இடம், சுகாதாரம் 3ம் இடம்.
7. க . அபிஷா - சமயம், குடியுரிமை ,3ம் இடம்.
8. வி . டினோஷன் - சித்திரம் 1ம்இடம்.
9. பொ . பிரசாந்த் - சித்திரம் 2ம்இடம்.
10. க . டிலக்ஸனா - சித்திரம் 3ம்இடம்.

தரம்: 08

1. இ.துஷிவர்த்தன் - சமயம், கணிதம், தமிழ்மொழி, விஞ்ஞானம், வரலாறு, புவியியல், தொழில்நுட்பம் 1ம்இடம், ஆங்கிலம், சுகாதாரம் 2ம்இடம். குடியுரிமை, சங்கீதம் 3ம்இடம்
2. சோ.நிரூசனா - நடனம் 1ம் இடம், தமிழ்மொழி, விஞ்ஞானம், வரலாறு, சுகாதாரம், குடியுரிமை 2ம் இடம், கணிதம், புவியியல், தொழில்நுட்பம் 3ம்இடம்.

3. சு.சிந்துஷன் - சுகாதாரம் 1ம் இடம், கணிதம், புவியியல், தொழில்நுட்பம், சங்கீதம் 2ம்இடம், தமிழ்மொழி, விஞ்ஞானம் 3ம்இடம்.
4. யோ.பகிர்தா – குடியுரிமை 1ம் இடம், சமயம் 2ம்இடம், வரலாறு 3ம்இடம்.
5. த. மிலானி - ஆங்கிலம்1ம் இடம், நடனம் 2ம் இடம்.
6. சாகித்தியா - சங்கீதம் 1ம்இடம், ஆங்கிலம் 3ம்இடம்.
7. சி.சுகிந்தா - சமயம் 2ம் இடம்.
8. ச.துஷிராஜ் - சித்திரம் 1ம்இடம்.
9. த.அபிமன்யு - சித்திரம் 3ம்இடம்.

தரம்: 09

1. சி.சர்மிலன் - குடியுரிமை, கணிதம் ,சமயம், தமிழ்மொழி, விஞ்ஞானம், வரலாறு ,புவியியல் சுகாதாரம், நடனம், தொழில்நுட்பம் ,ஆங்கிலம். 1ம்இடம்
2. சு.சயந்தன் - குடியுரிமை, கணிதம் ,சமயம், விஞ்ஞானம், வரலாறு, புவியியல், சுகாதாரம், நடனம், தொழில்நுட்பம். 2ம்இடம். தமிழ் 3ம்இடம்.
3. இ.யதுஷன் - சங்கீதம் 1ம்இடம், தமிழ், ஆங்கிலம் 2ம்இடம். சமயம், விஞ்ஞானம், வரலாறு புவியியல், குடியுரிமை தொழில்நுட்பம், சுகாதாரம். 3ம்இடம்.
4. ர.அஜித்தா - சங்கீதம் 2ம்இடம்.

தரம்: 10

1. ச. அம்சா - கணிதம், தமிழ்மொழி, வரலாறு, விவசாயம், புவியியல், சங்கீதம் 1ம்இடம் சமயம் 3ம் இடம்.
2. பா.சிவாஜனா - விஞ்ஞானம், சமயம், 1ம்இடம். கணிதம், புவியியல் சங்கீதம் 2ம்இடம்.

3. ம.சர்விகா - தமிழ்மொழி, சமயம், நடனம் 2ம் இடம், புவியியல் 3ம்இடம்
4. உ.ஹரியெனன் - கணிதம் 2ம்இடம்.
5. சா. அனுஷன் - வர்த்தகம் 1ம்இடம், விவசாயம் 2ம்இடம்
6. உ. பிரியந்தினி - நடனம் 1ம்இடம், விவசாயம் 2ம்இடம்.
7. பா.ஆதவன் - தமிழ்மொழி, சங்கீதம் 3ம்இடம்.

க.பொ.த (சாதாரண )2014 டிசம்பர்

1. வி.விஜிதினி 2A, B, 3C ,2S
2. சே.மதியழகன் B, 4C, S

தரம் 5 புலமைப் பரிசில் சித்தி (2014)

1. நாகேந்திரன் கலைநிலவன் 156

100 புள்ளிகளுக்கு மேல் பெற்றோர்

1. அ.சங்கவி 148
2. ச.அபிர்சன் 145
3. தெ.கஜப்பிரியன் 135
4. த.விஸ்வா 131
5. கு. தாரகன் 130
6. செ.செந்துஜன் 130
7. தெ.தரணிகன் 120
8. உ.கம்சியா 119
9. கு.தனஞ்சயன் 110

தரம் 5 புலமைப் பரிசில் சித்தி (2015)

1. இ.ஜஸ்வின் 154

2015 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றோர்

1. வ.தமிழ்ப்பிரியன் 118
2. சி.பிரியந்தன் 109

பரிசளிப்பு விழாவிற்கு உதவி நல்கியோர்

1. திரு க. இரத்தினபூபாலன் ரூபா 25000 வைப்பு நிதி வட்டியிலிருந்து, தரம் 5 புலமைப்பரிசில் சித்தியடையும் மாணவர்களிற்கான பரிசு
2. திரு சி. திருச்செல்வன் ரூபா 25000 வைப்பு நிதி வட்டியிலிருந்து, க.பொ.த (சா/த) பரீட்சையில் அதியுயர் சித்தி பெற்று உயர்கல்வி பயிலும் இரு மாணவர்களிற்கான பரிசு
3. திரு, திருமதி இ. நிர்க்குணன் ரூபா 15000 வைப்பு நிதி வட்டியிலிருந்து, க.பொ.த (சா/த) பரீட்சையில் முதனிலை சித்தியடையும் மாணவர்களிற்கான பரிசு
4. திரு, திருமதி இ. நிர்க்குணன் ரூபா 15000 வைப்பு நிதி வட்டியிலிருந்து, தரம் 9 மாகாண மட்டப் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களிற்கான பரிசு
5. கே.கே. வாசவன், கே.கே. கேசவன் ரூபா 12000 வைப்பு நிதி வட்டியிலிருந்து வருடாந்த பரிசளிப்புப் பயன்பாடு
6. திரு இ. சத்தியநாதன் ரூபா 15000
7. திரு ஐ. சிவபாலன் ரூபா 5000
8. மதிய உணவு பங்களிப்பு ஆசிரியர் கழகம்
9. திருமதி சி. பத்மநேசன் (பழைய மாணவி) தரம் 5 புலமைப்பரிசில் சித்தி பெற்றவருக்கு பொற்கிழி வழங்கலும் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றவருக்கு பரிசில் வழங்கலும்

# பாடசாலைக் கீதம்

**இராகம் : ஹம்சத்வனி** **தாளம் : ஆதி**

### பல்லவி

வாழ்த்தி வணங்கி மகிழ்வோம் - அன்னையை நிதம்
வாழ்த்தி புகழ்வோம் - சிறுவர்கள் நாம்

### அனுபல்லவி

தாழ்த்தி தலை வணங்கி சகலகலா ஞான வாணி
ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை (வாழ்த்தி)

### சரணம்

கொக்குவில் பதியில் ஒளிர்குன்றின் விளக்கம் எங்கள்
கோலக் கலையகத்தின் கொஞ்சும் தமிழ் மணமும்
திக்குப் பலவும் வென்று திகழும் புனித சைவச்
சோதிச் சுடர் ஒளிரும் தூய மனம் அருள (வாழ்த்தி)

சாதி சமய இன பேத எதுவும் நெஞ்சை
சாடிச் சிறுவருளச் சால்பு திரிந் திடாமல்
நீதி நெறி பயிற்றி நித்தியம் புகழுலகில்
பாதை வகுத்து மனுப் பண்பை வளர்க்கும் தாயை (வாழ்த்தி)

அறிவியல் அழகியலும் அருமை மொழியியலும்
நெறிவளர் மதவியலும் நெஞ்சில் மலர வைத்து
நிறைவு தரும் அன்னையே நின்பேர் புகழுலகில்
நின்றே வளர்வதென்று நின்றாள் பரவியென்றும் (வாழ்த்தி)